DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.14/2025**

Prosecution witness **PW.9 (LW.10)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Kanagesan | Caste | : | |
| Father Name | : | Sattu | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 61 |
| Time | : | | | | |

**(A1 to A3 present. A4 absent. Petition filed and allowed for A4. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **31.07.2026**

**31.07.2026 முதல் விசாரணை** :

1. நான் பொருளாதார குற்றப்பிரிவு, வேலூரில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது கிருஷ்ணகிரியில் வசித்து வருகிறேன். நான் இதற்கு முன்னர் கொலக்கொம்பை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது கொலக்கொம்பை காவல் நிலைய குற்ற எண்.104/2018 சட்டப்பிரிவுகள் 3(1) TNPPDL Act 1992, 323, 324 இதச வழக்கினை எனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 16.04.2018 ம் தேதி சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகளை விசாரணை செய்த போது எனக்கு முன்னர் இருந்த விசாரணை அதிகாரியிடம் கூறியது போல் என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

2. பின்னர் காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த குன்னூர் அரசு மருத்துவமனை மருத்துவர் முரளி என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு, காயச்சான்று பெற்றேன். வழக்கை முதல் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் முரளிதரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவினை 3(1) TNPPDL Act 1992, 323, 324 இதசவிலிருந்து 3(1) TNPPDL Act 1992, 323, 324 இதச உ/இ

34 இதச பிரிவின் படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன் (**அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து அன்றைய தினமே எதிரிகள் மீது அதே சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கில் அடிபட்ட நபர் அ.சா.1 மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பிறகு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் பேரில் அ.சா.8 மருத்துவமனை சென்று அவரது வாக்குமூலத்தை பதிவு செய்ததாக எனது விசாரணையில் தெரியவந்துள்ளது என்றால் சரிதான். நான் பதிவு செய்த அ.சா.8 முரளிதரனின் வாக்குமூலத்தில் எத்தனை மணிக்கு எந்த தேதியில் அவருக்கு மருத்துவமனையிலிருந்து தகவல் வந்தது என கூறப்படவில்லை என்றால் சரிதான்.

2. எனது விசாரணையில் மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு தகவல் வந்ததாக தெரிந்துகொண்டேனா என்றால் இன்டிமேசனை நான் பார்க்கவில்லை. இவ்வாறு மருத்துவமனையிலிருந்து தகவல் பெற்று காயம்பட்ட நபரை விசாரணை செய்யும் போது எத்தனை மணிக்கு வாக்குமூலம் பதிவு செய்தார் என்று அந்த வாக்குமூலத்திலேயே இருக்க வேண்டும் என்றால் வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை. நான் அ.சா.8 யை விசாரிக்கும் போது எத்தனை மணிக்கு அவர் வாக்குமூலத்தை பதிவு செய்தார் என குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை.

3. முதல் தகவல் அறிக்கையில் அ.சா.1ன் கையொப்பத்தை தவிர வேறு ஒரு கையொப்பமும் உடன் உள்ளது என்பது குறித்து நான் அது யாருடைய கையொப்பம் என விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் கிருஷ்ணராஜ் என்ற பணி மருத்துவரின் கையொப்பம் அதுவாகும். எதற்காக அவரிடமிருந்து கையொப்பம் வாங்கப்பட்டது என்றால் அவ்வாறு காயம்பட்டவரை விசாரிக்கும்

போது பணி மருத்துவரிடம் கையொப்பம் பெறுவது ஒரு முறையாகும். அந்த பணி மருத்துவரை நான் விசாரித்தேனா என்றால் இல்லை.

4. பொதுவாக மருத்துவமனையிலிருந்து தகவல் வரும் போது பொதுநாட்குறிப்பில் அது பதியப்பட வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தேதியில் பொதுநாட்குறிப்பில் அவ்வாறு பதியப்பட்டதா என பார்த்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. முதல் தகவல் அறிக்கையை நான் படித்து பார்த்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கு எதிரியை தவிர 1ம் எதிரியின் உறவினர் ஒருவர் எதிரிகளுடன் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நபர் யார் என நான் விசாரித்தேனா என்றால் சாட்சிகளை நான் விசாரிக்கும் போது அது போல் யாரும் இல்லை என கூறினார்கள்.

5. யார் அவ்வாறு கூறினார்கள் என்றால் சம்பவயிடத்தில் விசாரிக்கும் போது அவ்வாறு சொன்னார்கள். அவ்வாறு சொன்ன சாட்சிக்கு வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அதே நாளில் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்துள்ளேன் என்றால் சரிதான். நான் புலன் விசாரணைக்கு எடுத்த நாளான 16.04.2018ம் தேதியன்று வழக்கு சம்பந்தப்பட்ட வழக்கு சொத்துக்கள் ஏதாவது காவல் நிலையத்தில் இருந்ததா என்றால் இல்லை.

6. நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டதற்கு பிறகு 2ம் எதிரி அரசு தரப்பு சாட்சிகளின் மீது புகார் கொடுத்ததாக தெரியவந்ததா என்றால் தெரியவரவில்லை. அ.சா.8ம் அது குறித்து என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.8ன் வாக்குமூலத்தில் இரவு நேரம் என்பதாலும் பேருந்து வசதிகள் இல்லாததாலும் வாக்குமூலம் பதிவு செய்த அன்றே என்னால் முதல் தகவல் அறிக்கை நிலையம் வந்து பதிவு செய்ய இயலவில்லை என கூறவில்லை என்றால் இல்லை. மேலும் நான் பதிவு செய்த அ.சா.8ன் வாக்குமூலத்தில் 24ம் தேதி வாக்குமூலம் பதிவு செய்ய மருத்துவமனை சென்ற போது வாக்குமூலம் கொடுப்பவர் சிகிச்சையிலிருந்ததால் வாக்குமூலம் பதிவு

செய்ய இயலவில்லை என்றும், 12 மணிக்கு மேல் வாக்குமூலம் பதிவு செய்ததால் 25ம் தேதி என்று குறிப்பிடப்பட்டதாகவும் எனது வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

7. அ.சா.8யை நான் விசாரிக்கும் போது அவர் எந்த சாட்சியையாவது சாட்சியாக இருக்க அழைத்து அவர் சாட்சியாக இருக்க முன்வரவில்லை என்று எனது விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை. நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அன்றைய தினமே எனது புலன் விசாரணையை முடித்துக்கொண்டதால் நான் உதவி ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை நான் விசாரித்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நானும் இந்த வழக்கை சரிவர விசாரிக்கவில்லை என்றும், 2ம் எதிரி கொடுத்த புகாரை தெரிந்துகொள்ள நானும் முயற்சி செய்யவில்லை என்றும், இவ்வாறு சரிவர விசாரணை செய்யாமல் தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.